| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>குழந்தைராஜ் | அ.வ.எண்.92/2016 | 22.01.2024 |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

3. தாவா 4வது அயிட்ட சொத்தில் வரிசை எண் 9 ல் சர்வே எண்.112/2 ல் கட்டுப்பட்ட சொத்தை தவிர்த்து மீதமுள்ள சொத்துக்கள் மற்றும் தாவா 3வது அயிட்ட சொத்து இருதயமேரிக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி இருதயமேரி 1992 ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி இருதயமேரிக்கு லூர்துசாமி, மேரிஸ்டெல்லா, லாசர், ஜான்செல்வநாதன் மற்றும் தேக்கலாமேரி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி இருதயமேரியின் சொத்துக்களை மேற்படி வாரிசுகள் 5 பேரும் பாகம் பிரித்து கொண்டார்களா என்றால் இல்லை, பாகம் பிரிக்கவில்லை. தாவா 3வது அயிட்ட சொத்தை நான் யாரிடம் கிரையம் பெற்றேன் என்றால் ஜான்செல்வநாதன் வாரிசுகளிடமிருந்து கிரையம் பெற்றேன். நான் வா.சா.ஆ.22 ஆவணத்தின் படி கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். வாரிசு முறையின் படி இருதயமேரியின் வாரிசான ஜான்செல்வநாதனுக்கு 5ல் 1 பங்கு தான் இருதயமேரி சொத்துக்களில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.23 ஆவணத்தில் 6 ல் 4 பாகம் என்று குறிப்பிடப்பட்டு வாங்கியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.22 ல் குறிப்பிடப்பட்டு பாக விகிதாச்சாரத்திற்கு எனக்கு விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஜான்செல்வநாதனின் சகோதரர் மற்றும் சகோதரிகளின் பாகத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கூடுதலான பாகத்தினை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

4. தாவா 3வது அயிட்ட சொத்தில் சர்வே எண்.144/1 ல் உள்ள விவசாய மின்சார மோட்டார் இணைப்பு தற்போது வரை இருதயமேரி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.22 ல் கண்ட சொத்துக்களில் 6ல் 4 பாகம் நான் உரிமை கேட்க முடியாது என்றால் சரியல்ல. இறந்துபோன ஜான்செல்வநாதனின் மகன் தான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். தாவா 4வது அயிட்ட சொத்தில் குறிப்பிட்டுள்ள 9 வரிசை சொத்துக்களை பொருத்து எனக்கு எந்த கிரைய ஆவணமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.22 கிரைய ஆவணங்கள் மூலமாக தான் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் கண்ட சொத்துக்களை தான் எனது வழக்குரையில் தாவா 1வது மற்றும் 2வது அயிட்ட சொத்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5ல் கண்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு 6ல் 1 பங்கு பாகம் பிரிக்கப்படாத சொத்து என்றால் சரிதான். ஜான்செல்வநாதனின் மனைவி பெயர் குழந்தைதெரசு என்றாலும் அவரது மகள்கள் பெயர் டெய்சி பிரிசிட்சோபியா, கார்மல் சகாய உமா, பிரேமா பெனில்டா மேரி, ஜெட்ருட் ரமா ஆகியோர்கள் என்றால் சரிதான். ஜான்செல்வநாதன் இறந்த பிறகு அவர்கள் வாரிசுகளுக்கு இடையில் சொத்துக்களை பொருத்து எந்த பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஏற்படாத சொத்தை தான் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட காரணத்தினால் எந்த எந்த வாரிசுகளுக்கு எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியப்பட்டது என்று பாகப்பிரிவினை வழக்கில் தான் முடிவு செய்யமுடியும் என்றால் சரியல்ல.

5. நான் கிரையம் பெற்ற சொத்தில் நான் தனிப்பட்ட சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களில் தனிப்பட்ட சுவாதீனத்தில் இல்லாத காரணத்தினால் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படிக்கவில்லை. தாவா 4 வது அயிட்ட சொத்தில் வரிசை எண்.5 முதல் 7 ல் கண்ட சொத்துக்களை இருதயமேரியின் மகன் லாசரிடமிருந்து 1ம் பிரதிவாதி 22.08.2016 தேதியில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான், ஆனால் நான் தான் சாகுபடி செய்துவருகிறேன். தாவா 4 வது அயிட்ட சொத்தில் வரிசை எண்.9 ல் சர்வே எண்.112/2 ல் கட்டுப்பட்ட நிலத்தை 1ம் பிரதிவாதி மைனராக இருக்கும் போது 06.06.1965 தேதியில் அவரது தகப்பனார் 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா 3 வது அயிட்ட சொத்தில் இருதயமேரியின் வாரிசான லாசர் மற்றும் தேக்கலா மேரி ஆகியோரிடமிருந்து கடந்த 22.08.2016 தேதியில் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 1ம் பிரதிவாதி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடியில் இந்த வழக்கு சொத்துக்களை பொருத்து அவரது தாயார் மற்றும் சகோதரிகள் பெயரில் அ.வ.எண்.53/2017 என்ற பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தான் எந்த எந்த வாரிசுகளுக்கு எவ்வளவு பாகம் உரிமையானது என்று முடிவு செய்ய முடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. இருதயமேரிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும், 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் நான் அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வங்கியில் பயிர் கடன் பெற்றதாக தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.